Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 352

திங்கட்கிழமை 13 நவம்பர் 2023

ஜப்பசி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# வரவு - செலவுத்திட்டம்; எதிர்க்காது பெரமுன!

கொழும்பு, நவம்பர் 13

நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படும் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை பொது ஜன பெரமுன எதிர்க்காது என்று கொழும்பு அரசியல்வட்டா ரங்களிலிருந்து தெரியவருகின்றது. ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கும், பெரமுனவினருக்கும் இடையில் மனக் கசப்பு நிலவினாலும், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதி பதி ரணில் இன்று முன்வைக்கும் வரவு - செலவுத்திட்டத்தை எதிர்ப்பதில்லை என்ற முடிவை பெரமுன எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

»11



## ஜனாதிபதி அலுவலகத்தில் எளிமையான தீபாவளி நிகழ்வு

கொழும்பு, நவ. 13

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமாலை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கொண்டாட்டம் இந்து சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு மிகவும் எளிமையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதிக்கு இந்து சமய கலாசார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

»11

## உலகக் கிண்ணத் தொடரில் அழுத்தங்கள் ஏதுமில்லை!

### தோல்விகளுக்கு மன்னிப்புக் கோருகிறார் அணித்தலைவர் குசல் மெண்டிஸ்



கொழும்பு, நவ. 13

கிரிக்கெட்டை நேசிக்கும் நாட்டு மக்களிடம் இலங்கை கிரிக்கெட் அணி மன்னிப்புக் கோருவதாக இலங்கை அணியின் தலை

»11

## செவிப்பறைக்கு பாதிப்பு; சக மாணவர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 13

சக மாணவனின் செவிப்பறை பாதிக்கப்படும் வகையில் அவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான நால்வரில் ஒருவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

»11

## கிரிக்கெட் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுங்கள்

### நாமல் ராஜபக்ச அழுத்தம்



கொழும்பு, நவ. 13

கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் அரசியல்வாதிகளின் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவ்வாறு இல்லாத

»11

உரும்பிராயில்

## குழுக்களுக்கிடையில் மோதல்: போர்க்களமாக மாறிய வீதி!

யாழ்ப்பாணம், நவ. 13

தீபாவளி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்கும், ஏழாலையைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

»11

## திருகோணமலையில் நேற்று நிலஅதிர்வு

திருகோணமலை, நவ. 13

திருகோணமலையில் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு 3.4 மெக்னிடியுட் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

»11

## தொடர் மழையால் உடைப்பெடுத்த குளம்

### 15 ஏக்கர் வயல் வவுனியாவில் பாதிப்பு

வவுனியா, நவ. 13

கோமரசங்குளம் பகுதியிலுள்ள குளமொன்று உடைப்பெடுத்தமையால் அதன் கீழுள்ள 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடரும் மழையுடனான காலநிலையால் பல குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்

»11



## போதைப்பொருள் கடத்தியவரின் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல்

கொழும்பு, நவ. 13

போதைப்பொருள் கடத்தல்காரரின் வீட்டின் மீது நேற்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலானது தெமட்டகொட வெலுவான பிரதேசத்தில் உள்ள போதைப்

»11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 4,000,000 பேருக்கு உணவுப் பாதுகாப்பில்லை

## யாழ்ப்பாணப் பல்கலையின் விவசாயபீட விரிவுரையாளர் இ.ஈஸ்வரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 13**

**இலங்கையில் வாழும் 22 மில்லியன் மக்களில் கிட்டத்தட்ட 4 மில்லியன் மக்கள் உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்கிறார்களென இந்த வருட மே மாதம் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் விவசாயபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சுமார் 4 மில்லியன் மக்கள் அண்ணளவாக 17 சதவீதம் உணவுப் பாதுப்பின்மையை எதிர்கொள்கிறார்கள். இந்த உணவுப் பாதுகாப்பின்மையை கிளிநொச்சி, நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் மலையக மாவட்டங்களே அதிகளவில் எதிர்நோக்கியுள்ளன. 2021ஆம் ஆண்டில் முன்னைய ஜனாதிபதியான கோத்தாபயவின் அரச கொள்கை மாற்றத்தால் இந்த உணவுபாதுகாப்பின்மையை மோசமாகியுள்ளது.

முரண்பாடான கொள்கை வகுப்புக்கு முன்னர் இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்ட ஒரு நாடாக இருந்தது. ஆனால், 2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு சடுதியாக ஏற்பட்ட மாற்றம் காரணமாக எங்களால் அந்த அளவுக்கு நெல்லை உற்பத்தி செய்ய முடியவில்லை. சிறுபோக விளைச்சலை பார்ப்போமானால் பயிரினங்களுக்குத் தேவையான உள்ளீடுகளை சரியாக வழங்கப்படாமையால் விளைச்சலில் மந்தநிலையே காணப்படுகிறது. அதனால்தான் நாங்கள் துரதிஷ்டவசமாக நெல்லை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆட்சியில் உள்ளவர்கள் இவ்வாறான முரண்பாடான கொள்கைகளை வகுக்கும்போது விவசாயத்துறை சார்ந்த ஆராய்ச்சியாளர்களையோ அல்லது அது சார்ந்த சிந்திக்கக்கூடியவர்களையோ அணுகாமல் கொள்கைகளை வகுப்பதால் உணவுப் பாதுகாப்பில் தாக்கத்தை மக்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது - என்றார். (ச-27)

# கொலைச் சந்தேகநபர் தமிழ்நாட்டில் தஞ்சம்!

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றின் பிரதான சந்தேகநபராகத் தேடப்பட்டுவந்தவர், கடல் வழியாகத் தப்பித்து நேற்று தமிழ்நாட்டில் அகதியாக தஞ்சமடைந்த நிலையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனுஷ்கோடியில் நேற்றுமுன்தினம் தரையிறங்கிய அவரை மரைன் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மரைன் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், அவர் தொடர்பான தகவல்கள் யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரின் புகைப்படத்தைச் சோதித்துப் பார்த்து அவர் கொலைச் சம்பவம் ஒன்றில் தேடப்படும் சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளவர் என்று உறுதிப்படுத்தியுள்ளனர். இதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-100)



# உருத்திரபுரத்துக்கு குடிதண்ணீர் வசதி

**கிளிநொச்சி, நவ. 13**

நீண்டகாலமாக குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்கி வந்த கிளிநொச்சி - உருத்திரபுரம் மக்களுக்கு இராணுவத்தினரின் 551 காலாட்படை படைப்பிரிவால் குழாய்க் கிணறு அமைத்து குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் உருத்திரபுரம் புனித பற்றிமா பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் 55 படைப்பிரிவு மேஜர் ஜெனரல் நளின் ஜெயவர்த்தன பங்கேற்று குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர், அருட்தந்தையர்கள், பாடசாலை முதல்வர், அயல் பாடசாலை முதல்வர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-113)

# கீரிச்சம்பா பற்றாக்குறை திட்டமிட்டு உருவாக்கம்!

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 13**

சந்தையில் தற்போது கீரிச்சம்பா அரிசிக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை அரிசி மாபியாவால் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் போதியளவு கீரிச்சம்பா அரிசி இருப்பு காணப்படுகின்றபோதும், சில அரிசி ஆலை உரிமையாளர்கள் கையிருப்பை மறைத்து சந்தைக்கு விநியோகிப்பதைக் குறைத்துள்ளனர் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கீரிச்சம்பா அறுவடை குறைவாகக் காணப்பட்டபோதிலும் கடந்த பெரும்போகத்தில் கீரிச் சம்பா அறுவடை செய்யப்பட்டதன் காரணமாக நெல் மற்றும் அரிசி இருப்பு குறையவில்லை. அரிசியை பதுக்கிவைப்பவர்கள் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த போகத்தில் அதிகளவு கீரிச்சம்பா அரிசியை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கவேண்டும் என்றும் அமைச்சர் விவசாயத் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். கீரிச் சம்பா அரிசிக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்துள்ளபோதும், தற்போது கீரிச்சம்பா அரிசி 305 முதல் 310 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# பீனிக்ஸ் பறவைபோல் பெரமுன மீண்டெழும்

## கூறுகிறார் சந்திரசேன

**கொழும்பு, நவ. 13**

அழிவில் இருந்து மீண்டெழுந்து வருகிறது பொதுஜன பெரமுன கட்சி. எந்தக் கொம்பனாலும் கட்சியை அழிக்க முடியாதவாறு உயிர்த்துள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் எமது கட்சியே தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் - இவ்வாறு பெரமுன சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுன கட்சியை அழிப்பதற்கு முற்பட்டனர். கட்சியின் ஆதரவாளர்கள் பேரவாவிக்குள் தள்ளப்பட்டனர். அரசியல் பிரமுகர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

தற்போது சாம்பல் மேட்டில் இருந்து மீண்டெழுந்து பயணத்தை மேற்கொண்டுவருகின்றோம். யார் என்ன செய்தாலும் எமது கட்சியை அழிக்க முடியாது- என்றார். (ச-44)

# கடலட்டைகளுடன் இரண்டு பேர் கைது

மன்னார், நவ. 13



மன்னாரிலிருந்து சட்டவிரோதமாக கடலட்டை எடுத்துச் சென்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நகருக்குள் ஒரு முச்சக்கர வண்டியை சோதனையிட்டபோதே 49 கடலட்டைகளுடன் மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விரு சந்தேகநபர்களும் மன்னார் விடத்தில்தீவைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-60)

# நாட்டில் நீடிக்கும் மழையால் நீர்மின் உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு, நவ. 13

தற்போது நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நாட்டின் நீர்மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி 58 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கை மின்சாரசபை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்மின் உற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 84 சதவீதத்தைக் கடந்துள்ளது என்று இலங்கை மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளரும், பொறியியலாளருமான நோயெல் பெர்னாண்டோ தெரிவித்தார். இதனால் தேசிய மின் கட்டமைப்பில் அனல்மின் நிலையங்களின் பங்களிப்பு குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் தடையை நீக்க அரசாங்கம் கடும் முயற்சி

## அமைச்சர் பிரசன்ன கூறுகின்றார்

**கொழும்பு, நவ. 13**

**சர்வதேச கிரிக்கட் பேரவையால் இலங்கைக் கிரிக்கெட் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மீதான தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபையுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளது. இலங்கை கிரிக்கெட் மிகவும் ஊழல் நிறைந்த நிறுவனம் என்பது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். இதைத் தேசியப் பிரச்சினையாகக் கருதி இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழலை இல்லாதொழிக்கும் நோக்கில் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இது அரசியல் தலையீடு அல்ல.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி டி சில்வாவின் வேண்டுகோளுக்கு இணங்க சர்வதேச கிரிக்கெட்சபை இலங்கைக்குத் தடை விதித்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை கிரிக்கெட் இந்த நாட்டு மக்களின் பொதுச் சொத்தே தவிர அவரது தனிப்பட்ட சொத்து அல்ல. அவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தால் அது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும். விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த நாட்டில் சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் சிறுவர்கள் கிரிக்கெட்டில் ஈடுபட்டுள்ளனர். இந்த நாட்டில் கிரிக்கெட் உரிமையை மீளப்பெற வேண்டும் என்பதே அனைவரின் நம்பிக்கை. அதற்காக அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது-என்றார். (எ-இ)

# புத்தாண்டின் முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

புத்தாண்டின் முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு சம்பந்தமாக சிவில் மற்றும் இதர தரப்புகளுடன் கலந்துரையாடும் செயற்பாடுகளுக்காக அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, அவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் முன்மொழிவுகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டே வரைவு இறுதி செய்யப்பட்டுள்ளது.

அடுத்து வரும் ஆண்டின் முற்பகுதியில் சட்டவரைவைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அடுத்து வரவு- செலவுத்திட்டத்துக்கான விவாதங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்த சட்டவரைவு சமர்ப்பிக்கும் செயற்பாடு தாமதிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# ஜனகவுக்கு கொலைமிரட்டல்: பிரதான சந்தேகநபரும் கைது

கொழும்பு, நவ. 13

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்து கப்பம் பெற முயற்சித்த பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 12 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க கொலை செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு 1.5 மில்லியன் ரூபா கப்பம் கோரப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவிடம் கப்பம் கோரிய குற்றச்சாட்டில் அண்மையில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். ரம்புக்கனை பிரதேசத்தில் வைத்து குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (எ-இ)

# வரலாற்றில் சவாலானது தற்போதைய 'பட்ஜெட்'

## நிபுணர்கள் கருத்து

வழமையான வரவு-செலவுத் திட்டத்துக்கு மாறாக ஆக்கபூர்வமான கொள்கைகளை முன்வைத்தால் மாத்திரமே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

வரலாற்றில் மிகவும் சவாலான வரவு - செலவுத் திட்டமாக இந்தப் பாதீடு அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற வகையில் இன்று நாடாளுமன்றத்தில் 2024ஆம் ஆண்டுக்கான அரசாங்க செலவினங்கள் உட்பட வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை சமர்ப்பிக்கவுள்ளார். 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்டவரைவின்படி, அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 3 ஆயிரத்து 860 பில்லியன் ரூபாவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், 2023ஆம் ஆண்டு அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்டவரைவின்படி செலவினம் 3 ஆயிரத்து 657 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு 203 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. (எ-இ)




சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்தாலும், அதைத் திட்டம் போட்டு உடைக்கிற கூட்டம் உடைச்சுக் கொண்டுதான் இருக்குது. அதுவும் எங்கட தமிழ்ச் சனத்துக்கு உதெல்லாம் சொல்லிக் குடுக்கத்தேவையில்லை. அவையளுக்கு மூக்குக்கால போய் காதுக்கால வரக்கூடிய கெட்டித்தனம் நிறைய இருக்குது. என்னென்னவோ விசயங்களில விதம் விதமா சுத்துமாத்துச் செய்த எங்கடையாக்கள் இப்ப பள்ளிக்கூட அட்மிசனுக்கும் அதே சுத்துமாத்துகளில இறங்கிட்டுதுகள்.

யாழ்ப்பாணம் மாதிரி ரவுணில இருக்கிற பள்ளிக்கூடங்களில தங்கட பிள்ளையளைப் படிப்பிக்க வைச்சால்தான் தங்களுக்கும் கௌரவம், பிள்ளைக்கும் நல்லது எண்ட 'மெண்டாலிட்டி' இப்ப எல்லா யாழ்ப்பாணக்காரருக்கும் வந்திட்டுது. அதுக்காக அவை என்ன விலையும் குடுக்கத் தயார். முந்தி சில பள்ளிக்கூடங்களில கவனிக்கவேண்டியவையின்ர கையுக்குள்ள காசை கீசை வைச்சு ஏதோ செய்தவை. ஆனால் இப்ப எல்லாம் கடும் கட்டுப்பாடு. ஏதும் அசுமாத்தம் தெரிஞ்சாலே உடன வந்து அமுக்கிறதுக்கு ஆக்கள் ரெடியா இருக்கினம். அதால இப்பிடி காசால விளையாட ஏலாது. செல்வாக்குக்கும் இப்ப மதிப்பில்லாமல் போட்டுது. அதால ரூல்ஸ்படிதான் பிள்ளையச் சேர்க்கோனும். 'ரூல்ஸைப் பார்த்தா எங்கட இமேஜ் என்னாகும்? பிள்ளையின்ர படிப்பை உதால அழியவிட ஏலாது' எண்டு சொல்லிக் கொண்டு சிலர் புதிசு புதிசா ஒவ்வொரு திட்டம் போடுகினம்.

ரவுண் பள்ளிக்கூடங்களில தூர இடத்துப் பிள்ளையைச் சேர்க்கிறதுக்கு பெரிய தடையா இருக்கிற ரூல்ஸ், 'பள்ளிக்கூடத்துக்கு கிட்ட அஞ்சு வருசமாவது பிள்ளையின்ர குடும்பம் தொடர்ந்து வசிக்க வேணும்' எண்டதுதான். இப்பிடிப் பார்த்தால் குழந்தை பிறந்த உடனேயே ரவுணுக்கு கிட்ட வந்து இருந்தால்தான் ஆறுவயசில பிள்ளையைச் சேர்க்க முடியும். அப்பிடி ஆர் செய்வினம்? ஆனால் ரவுணுக்கு கிட்ட ஒருநாள் கூட குடியிருக்காத சிலர் தங்கட பிள்ளைக்கு அட்மிஷன் எடுத்தவையாம். எப்பிடி எடுத்திருப்பினம். அதுக்கொரு வழியிருக்கு.

ரவுணுக்க இருக்கிற ஆரும் ஒரு வீட்டுக்காரரிட்ட, அங்கயுள்ள ஒரு ரூமில நாங்கள் அஞ்சு வருசமா இருக்கிறம் எண்டு ஒரு கடிதம் வாங்கி, அதை சமாதான நீதவான், கிராமசேவையாளர், லோயர் எண்டு எல்லாரிட்டையும் கையுக்க வைக்க வேண்டியதை வைச்சு, சைன் வாங்கிக் கொண்டுபோய் பள்ளிக்கூடத்தில இவையள் காட்டுவினமாம். அந்தக் குடும்பம் அஞ்சு வருசமா ரவுணுக்க குடியிருக்குது எண்டதுக்கு இதைவிட வேறையென்ன அத்தாட்சி வேணும். அதால அதை ஆதாரமாக் காட்டிக் கொண்டு, தூர இடத்துக்காரர் ரவுண் பள்ளிக்கூடங்களில தங்கட பிள்ளைக்கு ஒரு இடத்தைப் பிடிச்சுக் குடுக்கினமாம். கள்ளக்காணி எழுதுறவையை உள்ளுக்க போடுறமாதிரி, இப்பிடி பொய்யான ஆதாரங்களை செட் பண்ணுறவையையும் உள்ளுக்க போட்டால்தான் எல்லாரும் திருந்துவினம் போல.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினம் ஒரு பரிசு — நாள் 38 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சி.ஞானமலர் | திருநெல்வேலி | வி.பதுமன் | வவுனியா |
| ஜெ.பிரசன்னா | மானிப்பாய் | இ.ராஜசந்திரன் | கண்ணகபுரம் |
| றெ.ஆருசா | பாஷையூர் | எஸ்.அபியன் | மாந்தை |
| வி.றொறத்தி | குருநகர் | வி.சாருஸன் | இரணைப்பாலை |
| த.விஜயன் | இணுவில் | எல்.லாவன்யன் | நானாட்டான் |
| த.றக்ஷனா | மீசாலை | எஸ்.ஜீவிதன் | அளவெட்டி |
| சி.நாகதர்சினி | மன்னார் | அ.அபிராம் | இளவாலை |
| மா.இந்து | ஊரெழு | | |




2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தே.அ.இல : ..........................................

தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசு கூப்பன் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பிவைக் கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பமுடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.



# இந்திய அணி நேற்றும் அசுரத்தனமான வெற்றி

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்தைத் தோற்கடித்து அபார வெற்றியைப் பதிவுசெய்தது இந்திய அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது இந்திய அணி. ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் கில் இருவரும் களமிறங்கினார்கள். வழக்கம்போல அபாரமாக அடித்தாடினார் ரோகில். கில்லும் நேற்று அடித்தாடவே செய்தார். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 11.5 ஓவர்களில் அணி 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கில். ரோகித் சர்மாவின் இன்னிங்ஸ் 61 ஓட்டங்களுடன் முடிந்தது. கோலி, ஸ்ரேயஸ் இருவரும் இந்திய அணியைத் தொடர்ந்தும் பலப்படுத்தினார்கள். பதற்றம் இல்லாமல் இருவரும் விளையாடினார்கள். 51 ஓட்டங்களுடன் கோலி வீழ்ந்தார். இதன் பின்னர் களமிறங்கிய ராகுல், ஸ்ரேஸுடன் இணைந்து அதிரடியைக் கையிலெடுத்தார். 400 ஓட்டங்களைத் தொடக்கூடிய வகையில் இந்திய அணி விளையாடியது. ஸ்ரேயஸ் 84 பந்துகளிலும், ராகுல் 64 பந்துகளிலும் தத்தமது சதங்களைப் பதிவுசெய்தனர். முடிவில் இந்திய அணி 4 விக்கெட்களை இழந்து 410 ஓட்டங்களைக் குவித்தது. ஸ்ரேயஸ் 128 ஓட்டங்களையும், ராகுல் 102 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பஸ் டி லீட் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நெதர்லாந்து அணிக்கு ஆரம்ப வீரர் வெஸ்லி 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். முன்வரிசை வீரர்களான மக்ஸ் ஓ டொட், அகர்மன், சைபிராண்ட் மூவரும் கௌரவமான ஓட்டங்களைப் பெற்றனர். அவர்கள் முறையே 30, 35, 45 ஓட்டங்களைப் பெற்றனர். நிடமன்ரு மத்திய வரிசையில் பெற்ற 54 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். 250 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது நெதர்லாந்து அணி. 160 ஓட்டங்களால் வென்றது இந்தியா.

இந்த ஆட்டத்தில் பெற்ற வெற்றியையடுத்து எந்தவொரு ஆட்டத்திலும் தோற்காமல் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்ற அணியாக இந்திய அணி தன்னைப் பதிவுசெய்தது. (ம)

### உலகக்கிண்ணத் தோல்வி

# பாபர் மட்டும் காரணமல்லர்

### வசிம் அக்ரம் ஆதரவு

உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி அடைந்த தோல்விக்கு பாபர் மட்டும் காரணமல்ல. அவரைப் பலிக்கடாவாக்க முடியாது - என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாபர் அசாம் தனி ஒருவராக அணியில் ஆடவில்லை. ஆனால் பாபர் அசாம் இந்த உலகக் கோப்பையிலும் இதற்கு முந்தைய ஆசியக் கோப்பையிலும் தலைமைத்துவத்தில் தவறுகள் செய்ததென்னவோ உண்மைதான். ஆனால், அவரை மட்டுமே குற்றஞ்சாட்ட முடியாது. பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பு என்னும் சிஸ்டம்தான் தோல்விகளுக்குக் காரணம். கடந்த ஓராண்டுக்கும் மேலாக தங்கள் பயிற்சியாளர் யார் என்றே வீரர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் பாபர் அசாமை மட்டும் பலிகடாவாக்க முடியாது. பாபர் அசாம் ஒரு நட்சத்திர வீரர். அவர் ஓட்டங்கள் எடுத்தால் நாடே மகிழ்ச்சியடைகிறது. ஆனால் தலைமைத்துவம் அவருக்குச் சுமையேற்றிவிட்டது - என்றார். (ம)

# தோற்கடிக்க முடியாத அணியாகவே இந்தியா உலகக்கிண்ணம் வெல்லும்!

### விவ் ரிச்சட்ஸ் நம்பிக்கை



எந்தவொரு அணியாலும் தோற்கடிக்க முடியாத அணியாகவே இந்திய அணி உலகக்கிண்ணம் வெல்லும் என்று மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் விவ் ரிச்சட்ஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தோல்வியடையாமல் தொடர் வெற்றிகளுடன் கிண்ணம் வெல்வதை நோக்கி இந்திய அணி சென்று கொண்டிருக்கிறது. இதுதான் இந்திய அணியின் எண்ணமாகவும் இருக்கும் என்று நினைக்கிறேன். அக்ரோஷமான அணுகுமுறை இந்தியர்களுக்கு இதுவரை திறம்பட வேலைசெய்துள்ளது. இத்தகைய மனநிலையிலிருந்து கீழே இறங்கினால் ஏதாவது தவறு நிகழ்ந்துவிடும். அவர்கள் தோற்கடிக்கப்பட முடியாத அணியாக இறுதி வரை இருப்பார்கள் என்றே நம்புகிறேன். இதற்காகத்தான் அவர்களும் முயற்சி செய்கிறார்கள் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வரிகளின் வருகைக்காலம்!

**2024** ஆம் ஆண்டுக்கான பாதீடு நாடாளுமன்றத்தில் இன்று முன்வைக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் என்ற ரீதியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பாதீட்டை விவாதத்துக்காகச் சமர்ப்பிக்கவுள்ளார். ஜனாதிபதி ரணிலே பெரமுனவின் காவலன் என்பதாலும், பெரமுனவே ரணிலை ஜனாதிபதியாகக் கொண்டுவந்தமையால், பாதீடு தோற்கும் பட்சத்தில் அது பெரமுனவின் தோல்வியாகவே அமையும் என்பதாலும் பாதீட்டின் உள்ளடக்கங்களுக்கு பெரமுனவினர் எதிர்ப்பை வெளிப்படுத்தப்போவதில்லை. அவர்கள் சிதறிப்போய் இருந்தாலும் பெரும்பான்மையைப் பெறுவதில் எந்தச் சிக்கலுமில்லை என்பதால், இந்தப் பாதீடு ரணிலுக்கு 'வெற்றிப் பாதீடே'. ஆதலால், பாதீட்டு வெற்றிபெறுமா? பெரும்பான்மை பெறுமா? என்பதெல்லாம்இங்குவிடயமோ–விவாதப்பொருளோ இல்லை. இங்கு தேவைப்படுவதும் – ஆராயப்பட வேண்டியதும் – பாதீட்டின் உள்ளடக்கங்களே.

பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையில் இருந்த இலங்கை, அந்த நலிவுநிலையில் இருந்து கொஞ்சம் தலைதூக்கக் கூடியவாறாக இருந்தமைக்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட கடனுதவிகள் தான் பிரதான காரணம். ஆனால், இப்போது நாணய நிதியமும் தன் கதவை அடைக்கத் தயாராகின்றது. நாணய நிதியத்தால் சொல்லப்பட்ட நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றவில்லை என்பதுதான், நாணய நிதியம் அடுத்தகட்ட உதவிகளை இலங்கைக்கு வழங்கப் பின்னடிப்பதற்குரிய காரணம். ஆனால், இலங்கைக்கு அது வழங்கியிருக்கும் அவகாசங்கள் இன்னமும் முடியவில்லை. இவ்வாறிருக்கையில், நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற – நம்பிக்கையைப் பெற – விசுவாசம் காட்ட ஒரு வாய்ப்பாகத் தான் இந்தப் பாதீட்டை ரணில் அரசாங்கம் பயன்படுத்தும். பொருளாதார மீளெழுச்சிக்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை என்று இலங்கை அணுகியதோ அன்றுமுதல் 'வரிகளும் வதைகளுமே' இலங்கையர்களின் வாழ்வில் எஞ்சியிருக்கின்றன. போதும் போதும் என்கின்ற அளவுக்கு மக்கள் நொந்து நூலாகிவிட்டனர். மக்களின் அதிருப்தியையும், எதிர்க்கட்சிகளின் அரசியலையும் கருத்திற்கொண்டு இரண்டாம் கட்ட வரிவிதிப்பைக் கண்மூடித்தனமாக மேற்கொள்ளாமல், தருணம் பார்த்துக் காத்திருக்கின்றது அரசாங்கம். எனவே, இந்த பட்ஜெட் என்பது அரசாங்கத்துக்கு, 'கோல் காப்பாளர் இல்லாத கோல்கம்பம் போன்ற' 'திறந்த வாய்ப்பு'. அதை 'ரணில் அன்ட் கோ' பயன்படுத்தவே செய்யும். ஆதலால், இன்றுமுதல் அடுத்த சில வாரங்கள் இலங்கையில் 'வரிகளின் வருகைக் காலமாக' அமையும்.

1980களின் பிற்பகுதியில் இலங்கை கறுப்புப் பணத்தால் வீழ்ந்து கிடந்தது. பிரேமதாஸ அந்தக் காலத்தில் ஜனாதிபதியாக இருந்தார். அவருடைய அரசாங்கத்தின் முதலாவது வரவு – செலவுத்திட்டம் 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்வைக்கப்பட்டது. நாட்டை பிரேமதாஸ தூக்கிநிறுத்துவார் என்று மக்கள் எதிர்பார்த்தனர். 'நாட்டின் காவலனாக' பிரேமதாஸ காட்டப்பட்டார். ஆனால், அவ்வாறானதொரு தோற்றப்பாடு வரவு – செலவுத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு மக்களின் எதிர்ப்பு மௌனிக்கச் செய்யப்பட்டது. உண்மையில், வரவு – செலவுத்திட்டத்தின் சாதகத்தனங்களாக சில காட்டப்பட்டாலும், மறைமுக வரிகள் மக்கள்மீது இறக்கப்பட்டன. பாலுக்குக் காவலனாகவும், பூனைக்குத் தோழனாகவுமே அந்த வரவு – செலவுத்திட்டம் அமைந்தது. இது தாமதமாகத்தான் பலருக்குப் புரிந்தது. இதேபோன்றதொரு நிலைதான் இன்றைய வரவு – செலவுத்திட்டத்திலும் இருக்கலாம். ஆதலால், வரவு – செலவுத்திட்டத்தின் சாதக – பாதகத்தனங்கள் தொடர்பில், 'நியாயத்தின் பாற்பட்டு' ஆழ்ந்த கரிசனை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பும், கடமையும் எதிர்க்கட்சிகளுக்கும் பொருளாதார வல்லுநர்களுக்கும் இருக்கவே செய்கின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

**- நி.தி.மிரோவ்(அமெரிக்க எழுத்தாளர்)**






### மேன்முறையீட்டு நீதிமன்ற

# தலைமை நீதிபதிக்கு எதிராகப் பிரேரணை

### எதிர்க்கட்சி தீர்மானம்

**கொழும்பு, நவ. 13**

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரான நிஸங்க பந்துல கருணாரத்ன பதவி விலக வேண்டும் என வலியுறுத்தும் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு எதிரணி நடவடிக்கை எடுத்துவருகின்றது என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் நடைபெறும் காலப்பகுதிக்குள் இந்த யோசனை சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. இந்த யோசனையில் மூன்றிலொரு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் (75 பேர்) கையொப்பமிட வேண்டும். அந்த ஒப்பந்தங்கள் திரட்டப்பட்ட பின்னர் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய விசாரணைக் குழுவை சபாநாயகர் நியமித்து, அந்தக் குழு அளிக்கும் அறிக்கையின்படி சம்பந்தப்பட்ட நீதிபதி குற்றவாளி என்று பரிந்துரைக்கப்பட்டால், மேற்படி யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அந்த முடிவு சபாநாயகரால் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும்.

அதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பல பாரதூரமான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

# 'சிம்' அட்டைகளை பதிவுசெய்வது கட்டாயம்!

### தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

கையடக்கத் தொலைபேசி 'சிம்' அட்டைகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் மீள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் தாம் பயன்படுத்தும் 'சிம்' அட்டையைத் தமது பெயரில் பதிவுசெய்து கொள்வது கட்டாயம் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நபர் ஒருவர் தமது கையடக்கத் தொலைபேசியில் #132# எனும் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம், தகவல்களைச் சரிபார்த்துக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நபர் ஒருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் பிறிதொரு 'சிம்' அட்டை பதிவு செய்யப்பட்டிருந்தால் அதை உடனடியாக இரத்து செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யாத நிலையில், அந்த 'சிம்' அட்டை மூலம் முறைகேடுகள் இடம்பெறும் நிலையில், அதை உரிய நபரே பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை**

**14.11.2023**
**செவ்வாய்க்கிழமை**
**ஐப்பசி 28**

சுபநேரம் : 10.37 - 12.07
ராகுகாலம் : 03.07 - 04.37

கந்தசஷ்டி விரதாரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் இலகுநாதன் செந்தூரனின் அகவை நாள் நினைவாகக் குருதிக் கொடை முகாம் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நாவற் கட்டை, கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள செந்தூர னின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-66)

# சிவதீட்சை

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் வியாழக்கிழமை சதுர்த்தி திதியன்று காலை 8 மணி சுபவேளையிலிருந்து பிரதம சிவாச்சாரியரால் சிவதீட்சை வழங்கப்படவுள்ளது. சிவதீட்சை பெற்றுக் கொள்ள விரும்புவோர் அன்றையதினம் இல. 78 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி கிழக்கு எனும் முகவ ரியில் அமைந்துள்ள திருவடி நிலை மடாலயத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று சைவ வாலிப சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ச)



# நயினை அம்மனை தரிசித்த சீனக் குழு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்.மாவட்டத்துக்கு அண்மையில் வருகை தந்தி ருந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்போது சீன தூதுவர் கி ஸென் ஹொங் உள்ளிட்டோர் சைவ சமய முறைப்படி வேட்டி அணிந்து ஆலயத்தை தரிசித்தனர். (ச-26)

# மரக்கறி விலை யாழில் உச்சம்!



யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்.குடாநாட்டு சந்தை களில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று நுகர்வோர் தெரிவித் துள்ளனர்.

சீரற்ற காலநிலை மற்றும் வெள் ளநீர்ப் பாதிப்பால் மரக்கறிப் பயிர்கள் அழிவ டைந்தமையால் அவற்றின் விலை உயர்ந்துள் ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தற்போது விரதகாலங்கள் ஆரம்பமாகி நடைபெற்றுவருவதால் மரக்கறி வகைகளுக்கு கிராக்கியும் ஏற்பட்டுள்ளன. குடாநாட்டு சந்தை களில் சகல மரக்கறி வகைகளும் 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17,9)

# வெண்கலச்செட்டிகுளம் பண்பாட்டுப் பெருவிழா

வவுனியா, வெண்கலச்செட்டிகுளம் பிரதேச செயலக மும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பிரதேசபண்பாட்டுப்பெருவிழா கடந்த வியாழக்கிழமை சிறப்புற இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி கு.சுலோஜனி தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வவு னியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர பங்கேற்றார்.

இதன்போது கலை இலக்கியத் துறைக்கான விருது களும் சமூக செயற்பாட்டாளர்களுக்கான விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-75)

# வவு.வில் உள்ளூராட்சி வார நிகழ்வு

வவுனியா, நவ. 13

வவுனியா வடக்கு பிரதேசசபையின் கலாசார நிகழ் வும் பரிசளிப்பு விழாவும் பிரதேசசபை செயலாளர் திருமதி சோ.மணிவண்ணன் தலைமையில் பிர தேசசபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வவுனியா வடக்குப் பிர தேச செயலாளர் இ.பிரதாபன் பங்கேற்றார். (ச-75)

# தொடரும் கனமழை வயல்களில் வெள்ளம்

## விவசாயிகள் கவலை

கொட்டித் தீர்த்த கனமழையால் வலி.கிழக்குப் பகுதியிலுள்ள வயல்கள் வெள்ளநீரில் மூழ்கியுள் ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள் ளனர்.

கடந்த இரு நாள்களாக கனமழை தொடர்ந்து பெய்து வருகின்றது.

கோப்பாய், நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி, இடைக் காடு உள்ளிட்ட இடங்களிலுள்ள வயல்கள் மற் றும் விவசாய நிலங்களில் பயிர்களை மூடி வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

மழை தொடர்ந்தால் பயிர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ச-17)

# தேசியமட்ட பேச்சுப் போட்டியில் சாவ. மகளிர் மாணவி முதலிடம்



கொடிகாமம், நவ. 13

சாவகச்சேரி மகளிர் கல்லூரி யில் தரம்- 8இல் கற்கும் மாணவி சுதர்சன் துர்க்கா தேசிய மட்டத்தி லான பேச்சுப் போட்டியில் முதலி டத்தைப் பெற்று சாதனை படைத் துள்ளார்.

அண்மையில் கொழும்பு விவே கானந்தா கல்லூரியில் நடை பெற்ற பிரிவு 3 க்கான பேச்சுப் போட்டியில் அவர் முதலிடத்தைப் பிடித்துள் ளார். (ம-159)

# நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், நவ. 13

அ.இரவி எழுதிய 'கொற்றவை பற்றி கூறினேன்' எனும் நூல் அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவை யின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் ஓய்வுநிலை கிராமஅலுவலருமான வடகோவை வரதராஜன் தலைமையில் நடை பெறும் நிகழ்வில் நூல் அறிமுக உரையை ஆய் வாளர் சி.விமலன், பதிலுரையை நூலாசிரியர் அ.இரவி ஆகியோர் ஆற்றவுள்ளனர் என்று ஏற் பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ச)



# சக்கரநாற்காலிகள் யுனிசெப் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் தென் மராட்சி பிரதேசத்தைச்சேர்ந்த விசேட தேவையுடை யோருக்கு சக்கர நாற்காலி மற்றும் நடைச்சக்கரம் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் திருமதி சு. உஷா மற்றும் உத விப்பிரதேச செயலாளர் திருமதி ச.தமிழினி ஆகி யோரால் பிரதேச செயலகத்தில் வைத்து அவை கையளிக்கப்பட்டன. (ச-9)



நெடுந்தீவு பிரதேச இளைஞர் விளையாட்டுவிழா நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் மழை தொடரும்!

கொழும்பு, நவ. 13

இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தென்படுகிற தளம்பல் நிலை காரணமாக நிலவுகின்ற மழையுடனான வானிலை மேலும் தொடரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது என சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு- கிழக்கு, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. மத்திய, சப்ரகமுவ, மேல், தென் மற்றும் கிழக்கு மாவட்டங்களின் சில இடங்களிலும் அத்துடன் குருநாகல் மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேல் மற்றும் தென் மாகாண கரையோரப் பிராந்தியங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும். பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20-30 கிலோமீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும் - என்றார். (ம)




## குப்பிழானில் உதவிக்கரம்

யாழ்ப்பாணம், நவ. 13

குப்பிழானில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பொருளாதார நலிவுற்றோருக்கு தீபாவளித் திருநாளை முன்னிட்டு புத்தாடைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொன்னம்பலம் ஜெகதீசனின் நிதிப்பங்களிப்பில் குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரம அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ச-66)



சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் வியாபார ஊக்கப்படுத்தல் வேலைத்திட்ட செயலமர்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதில் சிறுதொழில் முயற்சியாளர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். (ச-66)

## பருத்தித்துறையில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 13

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேசசபையின் புத்தகக் கண்காட்சி புலோலி பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் கே.கம்ஸநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.து.குலசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக 'எங்கட புத்தகங்கள்' நிறுவன இயக்குநர்களான பாலகிருஷ்ணன் இரகுவரன் மற்றும் குலசிங்கம் வசீகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-100)



## மாவீரரின் பெற்றோருக்கு மன்னாரில் மதிப்பளிப்பு!

மன்னார், நவ. 13

மன்னார், மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஈச்சிலவக்கை கிராமத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-66)

## கற்பூரப்புல் மயான வீதி புனரமைப்பு

முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் முள்ளியவளை கிழக்கு அபிவிருத்திச் சங்கத்தின் எல்லைக்குட்பட்ட கற்பூரப்புல் இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி மற்றும் மயானம் என்பவற்றைப் பிரதேசசபையின் உதவியுடன் சீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

முள்ளியவளைகிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-19)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவில் கவனமாக இருக்கவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி கிட்டும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்ததைவிட லாபம் குறைவு. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சங்கடங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### இரத்தினம் அரியேஸ்வரி

மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அரியேஸ்வரி அவர்கள் கடந்த (11.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமி அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி இரத்தினம் (முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, யோகேஸ்வரி, நாகபூசணி, ஜெகதீசன் (களஞ்சிய பொறுப்பாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்), ஜெகநேசன் (களஞ்சிய பொறுப்பாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகேந்திரம், சிவானந்தம் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி), மகேந்திரம் (மிருக வைத்திய நிலையம் - சாவகச்சேரி), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும், சகீலன் (சுவிஸ்), கோகிலன் (அபிஷா ரெக்ஸ், சாவகச்சேரி), றாஜினி (டென்மார்க்), ஜிவாஜினி (பிரான்ஸ்), பகீரதி (கனடா), சுகல்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், யாழினி, சுசிகலா, புவனேஸ்வரன், சிவநாதன், கிருபானந்தன், சதீசன் (நகராட்சி மன்றம் - சாவகச்சேரி) ஆகியோரின் மாமியாரும், சயானா, சாதனா, அபிஷா, அனோஷ்கா, அக்ஷயன், நிலக்ஷன், நிலக்ஷி, கவி நிலா, கவி வாணன், றம்ஜா, றதுஷன், ஆகாஷ், சிபி, கனி, அஸ்மிதா, தருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26921) A-1

## மரண அறிவித்தல்



### தங்கராஜா துரைராஜா

**(Formerly at Lawrie Muthu Krishna & Co., Colombo)**

உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையையும் தற்போது குமாரசாமி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா துரைராஜா அவர்கள் கடந்த (10.11.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, தங்கம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் (Former Assistant General Manager, Bank of Ceylon) பாசமிகு கணவரும், கலாநிதி நிராஜ் (Associate Professor, Northumbria University, UK), கலாநிதி நிருஜா (Consultant, US) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராங் (Academic advisor), கலாநிதி பிரணவன் (Senior technical specialist) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிகையின் அன்புப் பேரனும், அருணகிரிராஜா (Former Deputy Director of Education), சுரேந்திரராஜா (Denmark) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிதம்பரநாதன் (F.C.A), செல்வராணி (US), சண்முகநாதன் (Germany), காலஞ்சென்ற திருச்செல்வநாதன், அனந்தராணி (Canada), சிவனேசநாதன் (UK), ஜீவராணி (UK), மதிவதனராணி (Canada), காலஞ்சென்ற தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.11.2023 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


35/2, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:-குடும்பத்தினர்.
021 222 1139

(CS 26919) A-1

# மரண அறிவித்தல்

## பொன்னையா தர்மகுலசிங்கம்



தோற்றம்
29.08.1952

மறைவு
11.11.2023

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் குஞ்சியொல்லை புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (11.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை முத்துலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரவதனாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் ஆறுமுகம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், யுகன், உதயராணி, தீலிபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யோகவேணி, தர்சினி, சிந்துஜன் ஆகியோரின் மாமனாரும், மதுசிகா, டினோஜா, ஆதிரா, ஆருஜன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், சந்திராணி மற்றும் சந்திரகாந்தி ஆகியோரின் மைத்துனரும், சரோஜாதேவி, கிருபாதேவி, சாந்தினிதேவி, வசந்தி, பாலசுந்தரம், விஜயா, மஞ்சுளா, ரஞ்சினி, சுதர்லா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராதிகா, ரசிகரன், ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2023) செவ்வாய்க்கிழமை குஞ்சியொல்லை புலோலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானாத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குஞ்சியொல்லை,
புலோலி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 153 0181

(cr 40993) (N.I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனியவள அகழ்வு ஆவணம் கையளிப்பு நிகழ்வுக்கு எதிர்ப்பு

**மன்னார், நவ. 13**

**மன்னார் மாவட்டத்தில் தென்பகுதியில் கொண்ணையன் குடியிருப்புப் பிரதேசத்தில் மக்களின் அனுமதியின்றி தனியார் காணிகளை அபகரித்து நடைமுறைப்படுத்தும் கனியவள மணல் அகழ்வு ஆவணம் சட்டபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.**

கடந்த புதன்கிழமை சுமார் இருபது திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு வருகை தந்தபோது நடைபெற்றது.

கனியவள மணல் அகழ்வு ஆவணம் சட்டபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வுக்கு அதிகாரிகள் வருகை தருவதை அறிந்த மக்கள் தங்கள் ஆலய மணிகளை ஒலிக்கவைத்து கிராம மக்களை ஒன்று திரட்டி வருகை தந்த அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் செல்லமுடியாதவாறு பாதைக்குக் குறுக்கே மரங்களைப் போட்டு தடைசெய்தனர்.

அந்தப்பகுதியில் கனியவள மணல் அகழ்வதற்கான இடங்களைக் பார்வையிட்டு அதற்கான அனுமதியை வழங்கும் நோக்குடனே இந்தக் குழுவினர் வந்திருந்தமையை அறிந்ததும் மக்கள் திரண்டு எதிர்ப்பை தெரிவித்தனர்.

மணல் அகழ்வு மற்றும் காற்றாலைகளால் இந்தப்பிரதேசம் எதிர்கொண்டு வரும் பாதிப்புகளை வருகை தந்திருந்த அதிகாரிகளுக்குத் தெளிவுப்படுத்தி குறிப்பிட்ட இடத்துக்கு அவர்களை நகர்வதற்கும் பாதையை மறித்து முன் செல்லவிடாது தடுத்து திருப்பி அனுப்பியுள்ளனர். (ஒ-60-213)



# 3,983 நாய்களுக்கு யாழில் 'ஏ.ஆர்.வி.'

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்.மாநகர பிரதேசத்தில் கடந்த 3 மாத காலப்பகுதியில் மட்டும் 3 ஆயிரத்து 983 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து போடப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகரப் பிரதேசத்திலுள்ள 8 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுமே இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது. அத்துடன் 290 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை மூலம் கருத்தடை செய்துவைக்கப்பட்டது.

அதேவேளை வீதியில் நடமாடும் கட்டாக்காலி நாய்களும் பிடிக்கப்பட்டு ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்பட்டது என்றும் சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டனர். (ச-17)

# நானாட்டான் கால்நடைகளுக்கு மாந்தையில் மேய்ச்சல்தரை

## மாற்றுவழிக்கு ஏற்பாடு பிரதேச செயலர் தெரிவிப்பு

*மன்னார், நவ. 13*

நானாட்டான் பிரதேச கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் போதாதுள்ளமையால் ஏற்கனவே மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பெருவெளிப் பகுதியை கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமாக பொருத்தமான நடவடிக்கையூடாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையாகவுள்ளது என்று நானாட்டான் பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்காக மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பகுதிகளுக்குக் கொண்டு செல்வது சம்பந்தமான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்;

நானாட்டான் பிரதேச கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் போதாது காணப்படுகிறது. அதற்கான மாற்றுவழியைத் தேடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கட்டுக்கரைக் குளத்தினுள் அடையாளம் காணப்பட்ட புல்லறுத்தான் கண்டல் என்று அழைக்கப்படுகின்ற 350 ஏக்கர் விஸ்தீரணமுடைய நிலப்பகுதி ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர அங்கு மேய்ச்சல் தரவைக்கு பொருத்தமான பிரதேசமாக 150 தொடக்கம் 200 வகையான ஏக்கர் நிலப்பரப்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் நானாட்டான் பிரதேசத்தில் காணப்படும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கும் 2 ஆயிரத்து 500 எருமை மாடுகளுக்கும் போதுமானதாக இல்லை. அதற்கமைய ஏற்கனவே மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மாந்தை மேற்குப் பிரதேசக செயலர் பிரிவிலுள்ள பெருவெளிப் பகுதியை விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-213)

# சுகாதாரக் குறைபாடுகள் உணவகங்களுக்குச் 'சீல்'

## சுகாதாரப் பரிசோதகர்கள் அதிரடி

கிளிநொச்சி, நவ. 13

பூநகரி - வாடியடிப்பகுதியில் சுகாதாரக் குறைபாடுகளுடன் நடைமுறைகளைப் பின்பற்றாது இயங்கிய 3 உணவகங்களை 'சீல்' வைத்து மூடுமாறு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ. ஜென்சன் றொனால்ட் தலைமையில் பூநகரிப் பகுதியில் உணவகங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

பரிசோதனையில் மூன்று உணவகங்களில் ஈ, எலி கடித்த உணவுகளை விற்பனைக்கு வைத்திருத்தமை, மருத்துவ தகுதிச் சான்றிதழ் இன்றி உணவுகளைக் கையாண்டமை உள்ளிட்டவை கண்டறியப்பட்டன.

அதனையடுத்து உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து அண்மையில் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இனங்காணப்பட்ட குற்றங்களைக் கேட்டறிந்த நீதிவான், 95 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மூன்று உணவகங்களையும் சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிட்டார். (ச-9)

# சேவைநலன் பாராட்டு பளையில் இன்று

கிளிநொச்சி, நவ. 13

பளை மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் இலங்கை நிர்வாக சேவை விசேட தரம் அலுவலருமான கந்தையா தெய்வேந்திரனின் சேவையைப் பாராட்டி சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

பழைய மாணவர்கள், நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஓய்வு நிலை அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் 'தெய்வநாதம்' என்னும் நூல் வெளியீடு, மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல் மற்றும் கல்வி நிதியம் தொடக்கி வைத்தல் என்பனவும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

# வடக்கு – கிழக்கு தழுவி ஆவணக் கண்காட்சி!



யாழ்ப்பாணம், நவ. 13

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணம் தழுவி முன்னெடுக்கப்பட்ட வரலாற்று ஆவணப்படுத்தலும் கண்காட்சியும் யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 8 மாவட்டங்கள் தழுவிய சிவில், சமூக செயற்பாட்டாளர்களால் பிரதான சுடர்கள் ஏற்றப்பட்டன. நிகழ்வில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் ஜக்ஸ்சன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சோ.மாவை.சேனாதிராசா, வடமாகாண தலைமை அமைப்பாளர் கண்டுமணி லவகுசா, வடக்கு கிழக்கு மாகாண சிவில், சமூக செயற்பாட்டாளர்கள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. இந்து கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு



யாழ்ப்பாணம், நவ. 13

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவுநாளும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் பணிப்பாளர் க.ஜெ.பிரெட்லி, சிறப்பு விருந்தினராக மத்திய அமைச்சின் தேசிய பாடசாலை கிளை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.மணிமாறன், கௌரவ விருந்தினராக கொழும்பு கல்வி வலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌரி இரத்தினவேல் ஆகியோர் பங்கேற்றனர். மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு தொடர்ந்து பரிசில்கள் வழங்கலும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-27)

## சிங்களத்தில் பரீட்சை சாவ. இந்து முதலிடம்



யாழ்ப்பாணம், நவ. 13

தென்மராட்சி வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சிங்களதினப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் முதலிடம் பெற்று மாகாண மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

தரம் 6, 7, 8, 9 பிரிவுக்கான சிங்கள எழுத்துப் பரீட்சையில் சாவகச்சேரி இந்து கல்லூரி மாணவர்கள் நான்கு தரங்களிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

தரம் 9இல் சிவதாசன் நிதர்ஷனா, தரம் 8இல் சிவநேசன் பிரணவி, தரம் 7இல் குகாணந்தன் லக்சுதன் மற்றும் தரம் 6இல் மோகனதாஸ் அயூசிகா ஆகியோரே குறித்த பரீட்சையில் தோற்றி முதலிடத்தைப் பெற்றுள்ளனர். (ச-100)

## கௌரி விரத பூர்த்தி நாள் பூசையும் காப்புக் கட்டலும்

யாழ்ப்பாணம், நவ.13

குப்பிளான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த கேதார கௌரி விரதப் பூசையின் பூர்த்தி நாள் வழிபாடுகளும், காப்புக் கட்டும் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு உபயகாரர் கங்கல்பத்துடன் பூசைகள் ஆரம்பமாகி, தொடர்ந்து விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் அதைத் தொடர்ந்து அடியவர்களுக்குக் காப்புக் கட்டும் நிகழ்வும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

+++ +++ +++

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய கேதார கௌரி விரத பூர்த்தி வழிபாடுகள் இன்றுதிங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணியளவில் கேதார கௌரி விரதப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி அதைத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் அடியார்களுக்கு கௌரி விரதக் காப்புக் கட்டும் நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)


### நாய் தேவை

ஒரு வயது, ஒன்றரை வயது ஜேர்மன் சப்பேட் நாய் தேவை.

077 659 0606



அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு

### ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

ARIYALAI NEERNOCHCHITHALVU
SRI SITHIVINAYAKAR TEMPLE

Ariyalai, Jaffna, Sri Lanka. T.P:021 221 5461 அரியாலை. யாழ்ப்பாணம்.
ப.இல:HA/5/JA/218 இலங்கை.

கு.ரகுகாந்தன் தலைவர் | மோ.நந்தினி பொருளாளர் | சி.சந்திரகாந் செயலாளர்

### அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிய யாழ். மாநகர சபையின் கண்டி வீதி, 9ம் வட்டாரத்தில் (அரியாலை கிழக்கு) அமைந்துள்ள 552/15ம் இலக்க வரி மதிப்பீட்டுக் காணி அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துக்கு சொந்தமானது என்பதனை பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேற்படி ஆதனம் முன்னைய தர்மகர்த்தாவினால் திருமதி நேசமணி இரத்தினசிங்கம் என்பவருக்கு குடியிருப்பதற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் திருமதி வசந்தி தியாகலிங்கம் என்பவரின் பெயர் தவறுதலாக 11.02.2021 அன்று வெளிவந்த பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர். தலைவர்.

(CS 269171)A-1

### கண்ணீர் அஞ்சலி

மலர்வு 15 . 05 . 1938 (புங்குதீவு)



உதிர்வு 11 . 11 . 2023 (நல்லூர்)

**திருமதி நாகேஸ் அன்னலட்சுமி**

எமது ஆலய தேர்த்திருப்பணிச் சபை தலைவர் ச.நீதிராசா அவர்களின் அன்பு மாமியாரின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டிநிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஆலய பரிபாலன சபை,
தேர்த்திருப்பணிச்சபை,
அன்னதான சபை, அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர்.

அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்
அனிஞ்சியன்குளம், மல்லாவி, யோகபுரம்.

(CS 26920)A-1

### கண்ணீர் அஞ்சலி




**Prof.S.V.Parameswaran**

வாழ்நாள் பேராசிரியர் மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்
எளிமையான வாழ்வு
தன்னடக்கம்
சிவபக்தி நிரம்பபெற்ற
அன்னாரின் ஆத்மா ஈழத்து சிதம்பர நடராசர் பாத கமலங்களில் சாந்திபெறட்டும்

உறவுகள்
கருவப்புலம் வீதி, 4th ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,

(CS 26923)A-1

### கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 0.10.1953 இறப்பு 12.11.2023

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.மு.புருஷோத்தமன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் வாரித்தம்பி முத்துவேலு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்
[illegible]

(CR 400 ...)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று தீபாவளியன்று சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த பக்தர்கள், புலம்பெயர் தேசங்களில் வசிப்பவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நல்லைக் கந்தனை தரிசித்து சென்றனர். (ச-27)



# பச்சிலைப்பள்ளியில் உளவள கருத்தரங்கு

கிளிநொச்சி, நவ. 13

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஏற்பாட்டில் உளவள தின கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.குணஜா தலைமையில் நடைபெற்றது.

'பிரதேச செயலக அலுவலர்களுக்கு மகிழ்ச்சியான குடும்பம்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்ட தாய் சேய் நல மருத்துவ அதிகாரி மருத்துவர் க.ரஞ்சன் வளவாளராகப் பங்கேற்று கருத்துரையாற்றினார். (ச-9)

## வரவு...

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஆளும் தரப்பான பெரமுனவுக்கும் இடையில் அண்மைக்காலமாக மனக்கசப்பு நிலவுவதால் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனாலும், பெரமுன அவ்வாறான தொரு நிலைப்பாட்டை எடுக்காது என்று நேற்று மாலை பெரமுனவின் உயர் வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைத்தது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நிலைப்பாட்டை ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் எடுத்திருந்த நிலையில், வரவு - செலவுத் திட்டத்திலும் அதே நிலைப்பாட்டில் பெரமுன தொடரக்கூடும் என்று கூறப்பட்டது. ஆனாலும், அவ்வாறான நிலைப்பாட்டில் பெரமுன இல்லை என்றும், வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் முடிவிலேயே பெரமுன உள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ-ஒ-5)

## உலகக்...

வர் குசல் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணி வீரர்களுடன் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியின்போது இலங்கை அணிக்கு எந்தவிதமான அச்சுறுத்தலோ அல்லது வெளிப்புறத்தாக்கமோ ஏற்படவில்லை என இலங்கை அணியின் தலைவர் குசல் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பலவீனம் காரணமாக வெல்லக்கூடிய பல போட்டிகளில் தோல்வியடைய நேர்ந்ததாக இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அணியினர் திருத்திக்கொள்ளவேண்டிய தவறுகள் இருப்பதாகவும் புள்ளிகளைப் பெறுவதற்கான பல வாய்ப்புகளை அவர்கள் தவறவிட்டதாகவும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

எங்களுடைய திட்டம் மற்றும் வீரர்களின் திறமையின் அடிப்படையிலேயே கிரிக்கெட் அணி உருவாக்கப்பட்டுள்ளது.

நாங்கள் எடுத்த தீர்மானங்களுக்கு நாமே பொறுப்பு எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, தவறு இருப்பின் அதனையும் பொறுப்பேற்கத் தயாராகவுள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## செவிப்பறைக்கு...

கடந்த புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் நகரில் உள்ள தேசியப் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவனே தாக்கப்பட்டார். அவரது செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முறைப்பாடு பதியப்பட்டது.

யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் மாணவன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் தங்க வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த மாணவனின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூன்று மாணவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

தனியார் வகுப்புக்குச் சென்று வீடு திரும்புகையிலேயே மாணவன் தாக்கப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-ஒ-26)

## குழுக்களுக்கிடையில்...

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை 6.45 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் பலாலி வீதியில் நின்றிருந்த உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்கும், வீதியால் ஹன்ரர் ரக வாகனத்தில் பயணித்த ஏழாலையைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து ஹன்ரர் ரக வாகனத்தில் பயணித்த இளைஞர் குழு மீது உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதில் ஹன்ரர் வாகனம் சேதமடைந்துள்ளது.

இதனால், ஆத்திரமடைந்த ஏழாலையைச் சேர்ந்த இளைஞர் குழுவினர், 5 க்கும் மேற்பட்ட ஹன்ரர் வாகனங்களில் மேலும் பல இளைஞர்களை மேற்படி பகுதிக்கு அழைத்து வந்துள்ளனர். இதனால், அந்தப்பகுதியே போர்க்களம் போல் காட்சியளித்தது. பொதுமக்களின் பொதுப் போக்குவரத்துக்குத் தடையை ஏற்படுத்தி இரு தரப்புக்குமிடையே மோதல் ஏற்பட்ட நிலையில் பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதையடுத்து கோப்பாய், யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இதனையடுத்து மோதலில் ஈடுபட்ட இளைஞர்கள் அங்கிருந்து தப்பியோடினர். மேற்படி சம்பவத்தில் மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-66)

## போதைப்பொருள்...

பொருள் கடத்தல்காரரான தெமட்டகொட ருவானின் வீட்டின் மீது நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் முன்வாயிலில் இரண்டு குண்டுகளும் தோட்டத்தில் ஒரு வெடிகுண்டும் வீசப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை - தெமட்டகொட ருவன் புஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## தொடர்...

எது. இந்த நிலையில் மேற்படி குளம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உடைப்பெடுத்துள்ளது. ஊர் மக்கள் பல மணிநேரமாக குளத்தின் உடைப்பெடுத்த பகுதியை மண்நிரப்பிக் கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை பயனளிக்கவில்லை.

கோமரசங்குளம் நீண்ட காலமாக எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் குளத்தின் கீழ் 35 ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுகின்றன. (அ-ஒ-18)

## கிரிக்கெட்...

பட்சத்தில் வீரர்கள் அசௌகரியங்களுக்கும் பாரபட்சங்களுக்கும் ஆளாக நேரிடும் எனவும் குறிப்பிட்டார்.

தான் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த போது நிர்வாகப் பிரச்சினைகளைக் கலந்துரையாடல் மூலம் தீர்த்துவைத்ததாகவும், விளையாட்டு மற்றும் வீரர்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்துச் செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலுக்கும் கிரிக்கெட் நிர்வாகத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபையால் இலங்கை கிரிக்கெட் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடை காரணமாக வருடாந்தம் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 100 மில்லியன் டொலர் இழப்பு ஏற்படும் என நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிகழ்வில் கலந்துகொண்ட இந்துக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்ததோடு அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.யோகராஜா மற்றும் விசேட விருந்தினர்கள், ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க உட்பட ஜனாதிபதி அலுவலக உயர் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ஒ-இ)

## திருகோணமலையில்...

கந்தளாய், மொரவெவ, திருகோணமலை உள்ளிட்ட பிரதேசங்களில் நில அதிர்வு உணரப்பட்டதாக புவிசரிதவியல், சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி நன்னாளில் மத ஐக்கிய வழிபாடு





யாழ்ப்பாணம், நவ. 13

இன மத ஐக்கியம் வேண்டி தீபாவளி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சிவன் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. தேசிய இன நல்லிணக்கத்துக்கான அதிகார சபையின் தலைவர் கந்தையா கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொங்கல் பொங்கி விசேட யாகம் வளர்க்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் ஜெயசீலன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் வேல் நம்பி, யாழ்ப்பாண பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதேச பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

# மேற்கு முனையத்தின் ஊடாக கால்பதிக்கின்றது அமெரிக்கா!

கொழும்பு, நவ. 13

கொழும்பு துறைமுக நகரத்தின் மேற்கு முனையம் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதையடுத்து, அந்த முனையத்தின் ஊடாக அமெரிக்கா கால்பதிக்கவுள்ளது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அமெரிக்க நிறுவனமான அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் அதானி நிறுவனத்துக்கு 553 மில்லியன் டொலரை இருபது வருட காலப்பகுதியில் மீளச் செலுத்தும் கடனாக வழங்கியுள்ளது.

அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் எங்கு முதலீடு செய்வதாக இருந்தாலும் அமெரிக்க காங்கிரஸின் அனுமதியைப் பெற்ற பின்னரே முதலீடு செய்யும். அதானி குழுமத்தின் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாகவே அமெரிக்க அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் அதானி குழுமத்துடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

ஆதலால், அதானி நிறுவனம் மேற்கொள்ளும் முதலீடுகள் வாயிலாக அமெரிக்காவே ஆதிக்கம் செலுத்தும் என்று கருதப்படுகின்றது.

மேற்கு முனையத்தை ஒப்பந்தமிடும் நிகழ்வில், இந்திய தூதுவர் கோபால் பாக்லே, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் கலந்துகொண்டனர். அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்; கொழும்பு துறைமுகம் தெற்காசியாவின், இந்து சமுத்திரத்தின் துறைமுக மையமாக விளங்கும் என்று குறிப்பிட்டார். (ம-6)

**உடன் வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரிலிருந்து 5km சுற்றுவட்டாரத்திற்குள் உடன் வீடு வாடகைக்குத் தேவை.

076 105 6333

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நீர்வேலி குறுக்கு வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

071 372 0969

# சுற்றாடல் அதிகாரசபை தலைவர் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 13

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகேவின் சேவை உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலஞ்ச விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சுபுன் எஸ்.பத்திரகே மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அனுருத்த பொல்கம்பால உள்ளிட்ட மூவர் இந்த மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவரை பணியிலிருந்து இடைநிறுத்த அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கப்பலிலிருந்து அகற்றப்பட்ட கச்சா எண்ணெய் சுத்திகரிப்புக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்கு இலஞ்சம் கோரப்பட்டமை தொடர்பில் பிரபல தொழிலதிபர் ஒருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார். அதன் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட நடவடிக்கையில் சுபுன் எஸ்.பத்திரகே கைது செய்யப்பட்டிருந்தார். (எ-இ)

# மயிலணி முத்துமாரியில் கௌரிவிரத பூசை இன்று

யாழ்ப்பாணம், நவ. 13

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை கேதாரகௌரி விரதப் பூர்த்தி வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

காலை 7.30 மணியளவில் விசேட அபிஷேகமும் தொடர்ந்து காலை 8.30 மணியளவில் பூசை வழிபாடுகளும், காலை 9.30 மணியளவில் கேதார கௌரி விரதப் பூர்த்தி வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து அடியவர்களுக்கு கேதாரகௌரி விரதக் காப்பு வழங்கப்படும் என்று ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ.நா.சிவசங்கரக் குருக்கள் தெரிவித்தார். (ச-66)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

**TECHNO WORLD**

**A/L தொழில்நுட்பப்பிரிவு**

**A/L 2023** பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

**விசேட செயலமர்வு**

- 01,02,03 December 2023
  தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- 04,05,06 December 2023
  பொறியியல் தொழினுட்பவியல்
  உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- 07,08,09 December 2023
  ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்

**காலை 9.00மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை**

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346

# வல்லிபுர ஆழ்வாரில் தீபாவளி வழிபாடு



யாழ்ப்பாணம், நவ. 13

தீபாவளி திருநாளை முன்னிட்டு வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

சுதர்ஸ்சன கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த சிறப்பு பூசை வழிபாடு காலை 8.30 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து காலை 9.30 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று சக்கரத்தாழ்வார் உள்வீதி வலம் வந்து அருட்காட்சியளித்தார். (ச-100)

**காணி விற்பனைக்கு**

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 40 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- * 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- * நிலப்பரப்பு, நன்னீரூற்று
- * 18 அடிப்பாதையுடன்
- * சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- * யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
- * நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- * நன்னீர் ஊற்று நிலம்
- * தரகர் தேவையில்லை.
- * பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 076 057 0354
077 623 4204
076 755 8606

(CS 26896) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org